Cr.Misc.39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF PRINCIPAL SESSIONS COURT, THANJAVUR

S.C.No.389/2025

Dated 17-12-2025
Deposition of witness for : PW 8

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஸ்ரீராம் | வயது | : | 23 |
| தந்தை பெயர் | : | சாரதி | தாலுக்கா | : | தஞ்சாவூர் |
| கிராமம் | : | தஞ்சாவூர் | தொழில் | : | ரேடியோ சவுண்ட் சர்வீஸ் |

Solemnly affirmed by Thiru.A.Ekambaram, Grade-1 Bench Clerk, of this court in accordance with the provisions of Act X of 1873.

**Accused present**

**Counsel Present**

சாட்சியானவர் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் வருகை புரிந்து அவருக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை:

1) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். ரேடியோ சவுண்ட் சர்வீஸில் வேலை பார்க்கிறேன்.

2) என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையது. இரண்டாவது கையெழுத்து மோனிஸ் கண்ணா என்பவருடையது. நானும் அவரும்

நண்பர்கள்.

3) என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுகை மகஜரில் உள்ள கையொப்பம் என்னுடையது. என்னோடு மோனிஸ் கண்ணா என்பவரும் கையெழுத்து போட்டார். பார்வை மகஜரில் உள்ள என்னுடைய முதல் கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.2** ஆகும். கைப்பற்றுகை மகஜரில் உள்ள முதல் கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ-3** ஆகும்.

4) மேற்படி கையெழுத்துக்கள் காவல்நிலையத்தில் வைத்து போட்டோம்.

5) போலிசார் என்னை விசாரித்தார்கள்.

(சாட்சியானர் அரசு வழக்கை ஆதரிக்காமல் சாட்சியம் அளித்ததால் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய பிரிவு 157 Bharatiya Sakshya Adhiniyam, 2023 சட்டத்தின்படி அரசு வழக்கறிஞர் வேண்டுகோள் விடுத்தார். அதனால் நீதியின் பொருட்டு சாட்சியை பகுதியாக குறுக்கு விசாரணை செய்ய அரசு வழக்கறிஞருக்கு அனுமதி வழங்கப்பட்டது)

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை

1) போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றும் அப்போது 6.7.2025 ம்தேதி இரவு 11 .00மணியளவில் நானும் எங்கள் தெருவை சேர்ந்த மோனிஸ் கண்ணாவும் எங்கள் தெருவில் நின்று பேசிக்கொண்டிருந்ததாகவும் அப்போது தஞ்சாவூர் தெற்கு காவல்நிலைய ஆய்வாளர் இறந்து போன திருவேங்கடம் வீட்டின் முன்பு நின்று விசாரித்துக் கொண்டிருந்தார்கள் என்றும்,

2) அப்போது நாங்கள் இருவரும் போனபோது எங்களை சாட்சியாக வைத்து எங்கள்

முன்னிலையில் போலிசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்துக்கொண்டிருந்தார்கள் என்றும் அவைகளில் நாங்கள் இருவரும் சாட்சி கையொப்பம் போட்டோம் என்றும்

3) மேலும் சம்பவ இடத்தில் இருந்து சிறிதளவு ரத்தம் படிந்த சிமெண்ட் தரை மற்றும் ரத்தம் படியாத சிமெண்ட் தரை ஆகியவற்றை கைப்பற்றுகை மகஜர் மூலம் கைப்பற்றினார்கள் என்றும் அதிலும் நாங்கள் சாட்சி கையொப்பம் போட்டோம் என்று சொல்லி விட்டு தற்போது எதிரியை காப்பாற்ற உண்மையை மறைத்து பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

/உண்மை நகல்/

ஒம்/P.வேல் முருகன்
முதன்மை மாவட்ட நீதிபதி
தஞ்சாவூர்